## தும்பனே பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1. நிதிக்கூற்றுக்கள் சமர்பித்தல்

மீளாய்வாண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 28ம் திகதியும், முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஜூன் 16ம் திகதியும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபட்டிருந்ததுடன், மீளாய்வாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 16ம் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2. முனைப்பழியுல்ல அபிப்பிராயம

இவ்வறிக்கையின் 1.3ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 டிசம்பர் 31ம் திகதியில் உள்ளவாறான தும்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது நிலைப்பாடுஆகும்.

1.3. நிதிக் கூற்றுக்கள் மீதான எடுத்துரைகள்

1.3.1. தேறிய சொத்துக்களின் குறைவு

ஒன்றிணைக்கப்பட்ட நிதியம் கடந்த 3 வருடங்களாக பற்று மீதியாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது பற்று மீதி பாரிய அளவில் அதிகரித்து இருந்தது. இது நிதி முகாமைத்துவத்தின் பலவீனம் ஒன்றாக அவதானிக்கப்பட்டது.

1.3.2. கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ) சபைக்கு உரித்தான ரூபா 25,490 பெறுமதியான மரம் வெட்டும் இயந்திரத்தின் பெறுமதி மற்றும் கிரயம் மற்றும் ஜெனரேட்டர் ஒன்றின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆ) உணவு சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்தமைகளுக்காக 2013 மற்றும் 2014ம் ஆண்டுகளுக்காக போது சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகை ரூபா 45,500 மீளாவாண்டில் செலவாக கணக்கிடப்பட்டிருந்தது.

இ) மீளயவாண்டின் இறுதி தினத்தில் ஆயுர்வேத மத்திய நிலையத்தில் காணப்பட்ட மருந்து தொகையின் பெறுமதியான ரூபா 214,550 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

ஈ) களஞ்சிய பொருட்கள் கொள்வனவு செய்யும் போது மற்றும் வழங்கும் போது களஞ்சியசாலை முடிகொடுப்பனவு கணக்கீட்டு முறைமை பின்பற்றப்படாமல் இருந்ததுடன், மீளாய்வாண்டின் முதல் தினத்தில் இருந்த மீதிக்கு வருடத்திலான கொள்வனவுகள் சேர்க்கப்பட்டு வருடத்திலான வழங்கல்கள் குறைக்கப்படாமல்

மீளாய்வாண்டில் இறுதிதினத்தில் ரூபா 1,631,361 மீதித் தொகை கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்ததன் மூலம் அம்மீதி பிழையானதாக காணப்பட்டது.

உ) இருபது ஆண்டுகளுக்கான குத்தகை அடிப்படையில் ரூபா 500,000 செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததிக் கோயவத்த,க்ரீன்வூட் தோட்ட நிலம் நிதி அறிக்கைகளின் கணக்கீட்டு குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஊ) மீள்மதிப்பீட்டாண்டில் ஏலமிடப்பட்ட ரூபா 87,050 பெறுமதியான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் விடயங்கள் 06 கணக்குகளில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்.

கணக்கீட்டு விடுங்கள் தொடர்பான கட்டுப்பாட்டு கணக்குகளுக்கு அமைவாக மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 58,169,210 ஆக இருப்பினும் துணை ஆவணங்களுக்கு அமைய அம்மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 48,266,669 ஆனதினால் ரூபா 9,902,541 இற்கான இணைக்கமின்மை இந்நகணப்பட்டது.

1.3.4 பெறத்தக்க கணக்குகள்

பெற வேண்டி இருந்த 07 கணக்கு மீதிகளினது கூட்டுப் பெறுமதி ரூபா 27,465,111 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ஓராண்டு காலம் கடந்த கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 9,325,459 ஆக காணப்பட்டது.

1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிஇருந்த 02 கணக்கு நிலுவைகளினது கூட்டுப் பெறுமதி ரூபா 32,379,295 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் ஓராண்டு காலம் கடந்தகணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,274,066 ஆக காணப்பட்டது.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

03 கணக்கு விடயங்கள் தொடர்பில்தகவல்கள்கணக்காய்வுக்குசமர்பிக்கப்படாமையால், கூட்டுத்தொகைரூபா 31,158,375 இற்கானகொடுக்கல்வங்கல்கள்கணக்காய்வின்போதுதிருப்திகரமாகசோதனைமேட்கொள்ளமுடியாமல்காணப்பட்டது.

1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடன் இனங்காமை

பின்வரும் இணைக்கமின்மை நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடன் தொடர்பு இணைக்கமின்மை

அ) நி. பி. 1645

சபைக்கு உரித்தான அனைத்து வாகனங்களுக்காகவும் பதிவுப்புத்தகங்கள் பராமரிக்கப்பட்டிருக்க வேண்டி இருப்பினும், 07 வாகனங்கள் தொடர்பாக பதிவுப் புத்தகங்கள் ராபமரிக்கப்பட்டிருக்கவில்லை

ஆ) 1990 அக்டோபர் 10ம் திகதியிலான இல. 41/90

உடைய அரசநிர்வாக சுற்றறிக்கை

ஒவ்வொரு 06 மாதகாலத்துக்கு ஒரு முறை ஒவ்வொரு வாகனங்களினதும் எரியும் எரிபொருள் அளவு பரீட்சித்துப் பார்க்க வேண்டி இருப்பினும், 12 வாகனங்களின் எரியும் எரிபொருள் அளவு பரீட்சித்துப் பார்க்கப்பட்டிருக்கவில்லை.

இ) 1994 ஆகஸ்ட் 03 ம்திகதியிலானஇல. 26/92(1)

உடையஅரசநிர்வாகசுற்றறிக்கை

அனைத்து அரசவாகனங்களினதும் வெளிப்புற மேற்பரப்பில்அரச இலச்சினைமற்றும் அமைப்பின்பெயர்குறிப்பிடப்பட வேண்டி இருப்பினும், சபைக்கு சொந்தமான இதுவரை பதிவு செய்யப்பட் டுள்ள 15 வாகனங்கள் அதனடிப்படையில் செயட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஈ) 2013 ஏப்ரல் 11ம் திகதியிலான இல.

சிபிசி/சிஎஸ்/06/06/02 உடைய மத்திய

மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்

பிணைவைக்க வேண்டிய அதிகாரிகள் 06 பேரிடம் ரூபா 20,000 பிணைப்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2. நிதிமீளாய்வு

2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசம்பர் 31ம் திகதி முடிவடையும் ஆண்டுக்கான சபையின் மீண்டு வரும் செலவுகளை மிஞ்சிய வருமானம் ரூபா 6,788,128 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டு வரும் செலவை மிஞ்சிய வருமானம் ரூபா 15,772,071 ஆக காணப்பட்டதினால் மீளாய்வாண்டுக்கு ஒப்பீட்டளவில் நிதிநிலைமைகளில் ரூபா 8,983,943 இற்கான குறைவு காணப்பட்டது.

2.2 விளக்கமான நிதி மீளாய்வு

மீளாயவாண்டுக்கான மொத்தப் பற்றாக்குறை முன்னைய ஆண்டுக்கான மொத்தப் பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 11,175,513 இற்கான பற்றாக்குறையின் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. 03 வருமான விடயங்கலின் குரைந்ததும் 03 செலவு லிடயங்கலின் குடுதளும் காரனமாகும்.

2.3 தொழிட்பாட்டு மூலதன முகாமைத்துவம்

நடைமுறை விகிதம் மீளாய்வாண்டில் 1:1.2 ஆகவும் முன்னைய ஆண்டில் 1:1.02 ஆகவும் காணப்பட்டதினால் அவ்விகிதம் மகிழ்ச்சிகரமான நிலையில் காணப்படாததுடன் மொத்த நடைமுறை சொத்துக்களின் 22 சதவீதமான ரூபா 9.2 மில்லியன் தொழித்துறைசார் கடன் பெருநர்கள் ஆனதுடன், மொத்த நடைமுறைப் பொறுப்புக்களில் 54 சதவிதமான ரூபா 26.8 மில்லியன் தொழித்துறைசார் கடன் கொடுத்தோராக காணப்பட்டது.

2.4 வருமான நிர்வாகம்

2.4.1 வருமானங்கள் திரட்டுதலின் செயத்திறன்

மீளாயவாண்டுக்கான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானங்கள், உள்ளபடியான வருமானங்கள் மற்றும் நிலுவை வருமானங்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு,

| | 2015-01-01 இற்கான நிலுவை | வருடத்தில் சீட்டையிடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | | 2015-12-31 தினத்திற்கு அரவிடப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| | | | 2015-01-01 2015 தினத்திற்கான நிலுவையினால் சேர்க்கபட்ட வருமானம் வருமானம் | வருடத்திற்கான சீட்டையிடப்பட்ட வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட | |
| வீத வரி மற்றும் கட்டணங்கள் | 458,987 | 883,955 | 235,666 | 696,728 | 410,548 |
| வாடகை வருமானம் | 559,812 | 3,418,358 | 559,812 | 2,372,440 | 1,045,918 |
| அங்கீகாரங்கள கட்டனை | - | 1, 223, 225 | | 1,223,225 | - |
| வேறு வருமானம் | 10,106,972 | 14,443,798 | 5,031,715 | 1,218,126 | 18,300,929 |
| மொத்தம் | | | | | **19,757,395** |

மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 19,757,395 ற்கான முழு நிலுவையொன்று ஏற்பட்டிருந்தது.

### 2.4.2 <u>வீதவரி மற்றும் வரிகள்</u>

பின்வரும் விபரங்கள் அவதானிக்கப்பட்டன

அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 458,987 இற்கான வீதவரி மற்றும் வரிகள் மீதி காணப்பட்டதுடன், ஆண்டுக்கான விலைப் பட்டியல்கள் ரூபா 883,955 ஆக காணப்பட்டது. 2015 டிசம்பர் 31ம் திகதி அதனுள் அறவிடப்பட்டி ருந்தவை முறையே ரூபா 235,666 மற்றும் ரூபா 696,728 மாத்திரம் ஆகும். இது சதவிதமாக 51 சதவீதம் மற்றும் 79 சதவீதம்ஆகும். 2015 டிசம்பர் 31ம் திகதியில் ரூபா 410,548 நிலுவை மீதியாக காணப்பட்டது. 2016 ஜூலை 28ம் திகதி ஆகும் போது நிலுவையில் ரூபா 376,133 மீதி மேலும் அறவிடத்தக்கதாக காணப்பட்டது.

ஆ) 05 வருடங்களுக்கு ஒரு முறை புதிதாக மதிப்பீடு செய்து வரிகள் அரவிடப்பட வேண்டி இருப்பினும், சபையினால் 2004ம் ஆண்டு மேட்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு 2015ம் ஆண்டிற்கும் வீதவரி பட்டியளிடப்பட்டிருந்தது. வீதவரி புதியமதிப்பீடு ஒன்று 2014 ஆகஸ்ட் மாதத்தில் மற்றும் 2015 ஜூன் மாதத்தில் மேட்கொள்ளப்பட்டிருப்பினும், அவற்றின் அறிக்கைகளை இதுவரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 <u>வாடகை</u>

மீளாய்வாண்டில் விலைப்பட்டியளிடப்பட்ட வாடகை வருமானம் ரூபா 3,418,358 ஆகக் காணப்பட்டதுடன், அதில்2015 டிசம்பர் 31ம் திகதி ஆகும் போது அரவிடப்பட்டிருந்தவை ரூபா 2,372,440 மட்டும் ஆகும். இது சதவீதமாக, 69 சதவீதம் ஆகும்.

### 2.4.4 <u>கடை அறைகள் குத்தகைக்கு விடல்</u>

கடை அறைகள் குத்தகைக்கு விடல் சம்பந்தமாக பின்வரும் விபரங்கள் அவதானிக்கப்பட்டன.

அ) விலைமனு முறைமையை பின்பற்றி, கடை அறைகள் குத்தகைக்கு விடப்படும் போது விலைமனு நிபந்தனைகளுக்கு ஏற்ப திரும்ப செலுத்தப்படாத ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டிய விலைமனுப்

பணம் அறவிடப்பட்டதன் பின்னர் கடை அறைகள் வழங்கப்பட வேண்டி இருப்பினும், 06 கடை அறைகள் வழங்கப்பட்டு 04 ஆண்டுகள் கடந்திருப்பினும் ரூபா 111,150 ஆன வில மனுப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆ)கடை அறைகளை குத்தகைக்கு விடும் போது 03 மாதங்களுக்கான வாடகைப்பணம் ஒரே தடவையில் வைப்பாக பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பினும், 06 கடை அறைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டு 02 வருடங்கள் கடந்திருப்பினும்,2016 ஜீலி 28 ஆம் திகதிய வைப்பு தொகை ரூபா 29,626 இற்கான மீதிமேலும் அரவிடப்பட வேண்டி காணப்பட்டது.

இ) சட்டபூர்வமான ஒப்பந்தமின்றி 10 கடை அறைகள் வெளியாட்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தன.

ஈ) கலகெதர மடிகே கடை அறைகள் கட்டிடத்தின் மேல்மாடியில் 04ம் இலக்க கடை அறை முத்திரையிடப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 71,800 ஆககாணப்பட்டது. அறம்பேகடே 06ம் இலக்க கடை அறை தற்போழுது பழுதுபார்க்க வேண்டி இருப்பினும், அதுதொடர்பில் அவதானம் செலுத்தி இருக்காததுடன், அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 30,600 ஆக காணப்பட்டது.

உ) வாடகை செலுத்ததப்பட்டுக் கொண்டிருந்த கடை அறைகள் 03 வியாபார நடவடிக்கைகளுக்காக திறக்கப்படாமல் மூடப்பட்டிருந்தன.

ஊ) ஹதரலியத்த வியாபார கட்டடத்தொகுதியில் 05 கடை அறைகள் மூடப்பட்டிருந்தன.

2.4.5.<u>முச்சக்கர வண்டிக் கட்டணம்</u>

மீளயவாண்டின் ஆரம்பத்தில் ரூபா 777,450 இற்கான நிலுவை காணப்பட்டதுடன், ஆண்டின் போது ரூபா 443,050 ஆன, 56 சதவீதம் அரவிடப்பட்டிருந்தது. மீலாய்வாண்டின் போதான விலைப்பட்டியளிடல்கள் ரூபா 944,700 ஆககாணப்பட்டதுடன், ரூபா 503,150 ஆன, 53 சதவீதம் மட்டும் அறவிடக்கூடியதாக காணப்பட்டது. 2015 டிசம்பர் 31ம் திகதி ஆகும் போது நிலுவை மீதியாக ரூபா 773,700 காணப்பட்டதுடன், அம்மீதியில் ஓராண்டிற்கு மேலாக முச்சக்கரவண்டிகள் 137 இடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 546,750 காணப்பட்டது. 2015 டிசம்பர் 31ம் திகதி காணப்பட்ட மீதியில் ரூபா 671,406மீதி 2016 ஜூலை 28ம் திகதியாகும் போது இன்னும் அறவிடப்பட வேண்டி காணப்பட்டது.

2.4.6 <u>நீர்கட்டணங்கள்</u>

பின்வரும் விபரங்கள் அவதானிக்கப்பட்டன

அ) 2015 ஜனவரி 01ம் தினத்தன்று நிலுவை நீர்கட்டண மீதி ரூபா 638,583 ஆக காணப்பட்டதுடன், ஆண்டின் போதான விலைப்பட்டியளிடப்பட்ட வருமானம் ரூபா 985,550 ஆகும். அதில் 2015 டிசம்பர் 31ம் திகதி ஆகும் போது அறவிடப்பட்டு இருந்தவை முறையே ரூபா 328,692 மற்றும் ரூபா 656,309 மட்டும் ஆகும்.இது சதவீதமாக 51 சதவீதம் மற்றும் 67 சதவீதமாக காணப்பட்டன. மீள்மதிப்பீட்டாண்டின் இறுதிதினத்தில் ரூபா 639,222 நிலுவை மீதி காணப்பட்டதுடன், நீர்கட்டண அறவீடு பலவீனமான நிலையில் காணப்பட்டது. நிலுவை மீதிகளில் 2016 ஜூலை 26ம் திகதி ஆகும் போது ரூபா 425,987 மேலும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது.

ஆ)விலைப்பட்டியல்களை செலுத்தாமை மற்றும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது நீர் வழங்கல்களை நீக்கியதன் விளைவாக சபையினால் நீர் வழங்கக் கூடிய நீர் வழங்கல் திட்டங்கள் 03 இனது நீர் பாவனையாளர்கள் 85 பேர்களினுடைய நீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. மீள்

மதிப்பீட்டாண்டின் இறுதி தினம் ஆகும் போதும் அவர்களுக்கு நீர் இணைப்புகள் மீள் வழங்கப்படாதிருந்ததுடன், அவ்வாடிக்கையாளர்களிடம் இருந்து ரூபா 292,561 ஆனதொகை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.4.7 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள்

2015 டிசம்பர் 31ம் திகத்திக்கு ரூபா 1,441,333 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் ரூபா 15,000,849 முத்திரை கட்டணங்கள் அறவிடப்பட வேண்டி காணப்பட்டது.

3 .செயட்பாட்டுமீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையின்மைகள்

2015 ம் ஆண்டிற்கு அமைவாக சபையின் நிதியங்கள் மூலம் ஒப்பந்தமிடப்பட்ட உடன்படிக்கைகள் 46 இல் 25 உடன்படிக்கைகளுக்கு அமைவான ரூபா 14,366,057 பெறுமதி செலுத்தப்பட வேண்டிகாணப்பட்டது.

3.2 செயற்பாட்டு திறமையின்மைகள்

பின்வரும்விடயங்கள்அவதானிக்கப்பட்டன

(அ)உறைதிறக்கப்படாத 02 குளிர்சாதனப்பெட்டிகள் அரங்கத்தினுள் வைக்கப்பட்டிருந்ததுடன், அவ் வியந்திரங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

9ஆ) கிரிஹாகம கணனி மத்திய நிலையம் மாணவர்கள் இன்மையால், மூடப்பட்டிருந்ததுடன், மாணவர்களை வரவழைத்து கொள்வதற்கான எந்த வித திட்டமும் காணப்பட வில்லை.

(இ) சபைக்கு உரித்தான முடுகம்மன நீர்வழங்கல் திட்டம் முடங்கிகாணப்பட்டது.

3.3 பொருளாதாரமல்லா பரிமாற்றங்கள்

சபை தலைவர், உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் 14 பேர் சீனாவில் இடம்பெற்ற கற்கை கருத்தரங்கு ஒன்றிற்கு பங்கேற்பதற்காக ரூபா 2,560,000 சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. சீனாவின் குவான்ஷு நகரசபையின் அழைப்புகடிதம் ஒன்றிட்கு அமைய, 2015 மார்ச் 18 மற்றும் 19ம் திகதிகளில் கருத்தரங்கு ஒன்றிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும், கண்டி, குருதெனியவில் அமைந்துள்ள தனியார் சுற்றுப்பயண நிறுவனம் 2015 மார்ச்17 முதல் 29 வரையான திகதிகளுக்கு பயணத்தினை ஏற்பாடு செய்து இருந்தது. அவ்வாறு இருப்பினும், 2015 மார்ச் 28 முதல் ஏப்ரல் 03 வரையான 07 நாட்கள் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பிரதேச சபைகளின் பதவிக்காலம் முடிவடைவதற்கு நெருக்கமாக இருந்த போதிலும், இவ்வாறான வெளிநாட்டு பயணங்களுக்கு கலந்து கொள்வதின் மூலம் எவ்வித பிரதிபலனும் சபைக்கு பெற்றுக்கொள்ள முடியாமை தொடர்பில் கருத்திற்கொள்ளாமல் கருமமாற்றி இருந்தமையினால், இதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,560,000 பொருளியலல்லா செலவாகஅமைந்திருந்தது.

3.4 <u>ஒப்பந்த நிர்வாகம்</u>

3.4.1 <u>சுஜாதா பெணகள் கல்லூரி முன்னால் உள்ள வியாபார கட்டடத் தொகுதியை நவீன மயமாக்கல் – ரூபா2,057,307</u>

இது தொடர்பில் பின்வருபவை அவதானிக்கப்பட்டன

(அ) 1988 பிரதேச சபை (நிதிமற்றும்நிர்வாக) விதிக் கோவை 177 மற்றும் 178 அமைவாக விலைமனு கோரல் நடை முறைகளை பின்பற்றி போட்டி அடிப்படையில் ஒப்பந்தக்காரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படாமல் ஒரே கட்டிடத்தில் மேட்கொள்ளவேண்டிய ரூபா 4,000,000 இற்கு நெருங்கிய பெறுமதி உடைய வியாபார கட்டிடத்தொகுதியை நவீனமயமாக்கும் செயற்பாடு, படிமுறை 1 மற்றும் 2 என வேறுபடுத்தி 02 மதிப்பீடுகளின் ஊடாக சமூக அமைப்புகள் இரண்டிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014ம் ஆண்டுக்கான உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தொகைகளை உபயோகித்து வியாபார கட்டடதொகுதியில் வீதிக்கு திறக்கப்படாத பின்புறத்தின் கீழ் மாடிகட்டப்பட்டு சுவர்கள் செப்பனிடப்பட்டு சாரளசட்டங்கள் பொருத்தப்பட்டு கட்டுமானங்கள் இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன், மீ. 30x5 அளவான அப்பகுதியின் எஞ்சியுள்ள செயற்பாடுகளை பூரணப்படுத்தி பிரயோசனமான காரியம் ஒன்றிற்கு உபயோகிக்காமல் அதனோடு இணைந்த மேல்மாடியை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.அந்த பகுதியும் பூரணப்படுத்தப்படாமல் நிர்மானப் பணிகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தமையினால், 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் ரூபா 2,057,307 செலவிட்டு நிர்மானிக்கப்பட்ட கட்டடத்தின் கீழ் மாடி மற்றும் மேல்மாடி 2016 ஜூலை 30ம் திகதி ஆகும் போது பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(இ) பழைய வியாபாரகட்டட தொகுதிக்கு இணைந்தமீ .30x5 அளவிலான கீழ் மாடி மற்றும் மேல்மாடி என 02 பகுதிகளாக நிர்மானிக்கப்பட்டிருப்பினும், அதற்காக கட்டட திட்டம் வரையப்பட்டு அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குறிப்பிடப்பட்ட கட்டுமானங்கள் பிரதான நுழைவுப்பாதைக்கு திறந்ததாக இருப்பினும், கட்டிடம் பாதை திசைக்கு திறந்து காணப்படாமையினால், கட்டப்படுகின்ற பகுதி வியாபார ரீதியான காரியங்களுக்கு பயன்படுத்தக் கூடிய நிலைமையும் பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது.

(உ) முதற் கட்ட வேலைகளின் 05ம் இலக்க விடயத்தில் கீழ் கூரையில் Hவகையான இரும்பு பட்டிகள் 08 இனை பொருத்துவதற்காக ரூபா 182,688 செலுத்தப்பட்டிருந்தபோதிலும்,Hஇரும்பு பட்டிகள் 06 மட்டும் பொருத்தப்பட்டு இருந்தமை 2016 ஜூலை 14ம் திகதி பௌதீக சோதனையின் போது இனங்கணப்பட்டமையினால், Hவகையான இரும்பு பட்டிகள் 02 இற்காக ரூபா 45,672 மேலதிகமாக செலுத்ததப்பட்டிருந்தது.

**(ஊ)** 08 ம் இலக்க வேலை விடயத்தின் கீழான மி.மீ 75X 75 கட்ட வலை பொருத்துவதற்காக கண மீட்டர் 190.89 இற்காக ரூபா 40.469 செலுத்தப்பட்டு இருப்பினும், 2016 ஜுன் 16 ம் திகதி பௌதீக சோதனையின் போது காணப்பட்ட அளவு கண மீட்டர் 143.1 ஆதனதினால் கண மீட்டர் 47.79 இற்காக ரூபா 10.131 மேலதிகமாக செலுத்த்ப் பட்டிருந்தது.

(ஊ). 10ம் இலக்க வேலை விடயத்தின் கீழ் உட்கூரை நிர்மானிப்பதற்காக கண மீட்டர் 140 இற்கபாக ரூபா 328.160 செலுத்தப்பட்டிருப்பினும் பௌதீக கோதனைகளுக்கு அமைவாக, அவ்விதமான உடகூரை ஒன்று நிரமானிக்கப் பட்டிருக்கவில்லை.

3.4.2 <u>ஹதரலியத்த நகர மண்டபத்தின் நுழைவு பாதை நிர்மானித்தல் ரூபா 1,470.000.</u>

இத் தொழில் சம்பந்தமாக 2016 ஜுன் 14ம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக சோதனையின் போது பின்வரும் விடயங்கள வெளிப் படுத்தப்பட்டன.

அ. வேலை விடயம் இல 07ன் கீழ் 1:3 அண்ணசவ் சாந்து கலவையின் மூலம் வெட்டுவதற்கு ரூபா 60.904 தசெலுத்தப் பட்டு இருபட்பினும், சுண்ணச்சாந்து மிக இலகுவாக உடையக்கூடிய பலவீனமான கலவையாக காணப்பட்டது.

ஆ. வேலை விடயம் இல 08 ன் கீழ் பூச்சிடப்பட்ட கற்துண்டுகள் இணைப்பதற்காக மீ.80 நீளம் மற்றும் மீ.1.83 அகலமா பிரதேசத்திற்காக ரூபா 301.876 செலுத்தப் பட்டிருப்பினும், பௌதீக சோதனைக்கு அமைவாக. அதன் நீளம் மீ 80. மற்றும் அகலம் மீ 1.6 என இனங்காணப்பட்டது. இதன் அடிப்படையில் 18.4 இற்காக ரூபா 37, 941 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

இ. வேலை விடயம் இல. 09 ன் கீழ் புற்கள் நடுவதற்காக ரூபா 31, 343 தசெலுத்தப் பட்டு இருப்பினும், சோதனை சந்தர்ப்பத்தில் பராமறிப்பினை கைவிட்டு புள் முளைப்பதற்குப விடப்பட்டிருந்தது.

ஈ. வேலை விடயம் இல 16 இன் கீழ் இடையே உரவான திண் கரை கற் துண்டுகளளின் தரப் பரசோதனை அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 10,000 செலுத்தப் பட்டு இருப்பினும், அவ்விதமான தரப் பரிசோதனை அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, பூச்சிடப் பட்ட கற்துண்டுகள் போதியளவு தரத்தினை கொண்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது இனங் காணப்பட்டது.

உ. நுழைவு பாதையின் நடைபாதையின் நீளம் மமீ. 10.7 மற்றும் அகலம் மீ1.6 அளவிலான பகுதி புதைந்து சிதைந்து காணப்பட்டது.

3,4,3 <u>ஹதரலியத்த புதிய நகரத்தின் பேருந்து நிலைய நவீனமயமாக்கல் (கற் துண்டுகள் இணைத்தல்) ரூபா 1,895,714</u>

இத்தொழில் தொடர்பான 2014 ஜுன் 14ம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பின்வரும் விபரங்கள் வெளிப்படுத்தபட்டன.

(அ) இத் தொழிலுக்கு அமைவான கோப்பினில் நிர்மானிப்பு தொடர்பான திட்டங்கள் கோப்பிடப் பட்டிருக்கவில்லை.

(ஆ) வேலை விடயம் இல 04 இன் கீழான திண் கரை தூண்கள் 08இற்காக ரூபா.55,087 பட்டிருப்பினும், 06 தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை பௌதீக சோதனையில் இணங்காணப்பட்டமையினால் மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 13,772 செலுத்தப்பட்டிருந்து.

(இ) வேலை விடயம் இல 07 இன் கீழான கற் துண்டுகள் இணைக்கப்பட்ட வ.மீ. 365 இற்காக ரூபா 1,133,445 செலுத்தப் பட்டிருப்பினும். அதில் வல.மீ. (2X2. 9X2. 3) 13.34அளவில் பேருந்து நிறுத்தங்கள் 02 நிர்மானிக்கப்பட்டீருந்தமையினால், அதனுள் கற் துண்டுகள் இல்லாமல் இருந்த நிலையில் அதற்காக ‘ரூபா 41.425 மேலதிகமாக செலுத்தப் பட்டிருந்தது.

(ஈ). வேலை விடயம் இல 10 இன் திண் கரை பலகைகள் 20 பொருத்துவதற்காக ரூபா 95.260 செலுத்தப் பட்டிருந்த போதிலும், பௌதீக சோதனையின் போது 15

திண் கரை கலகைகள் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டமையினால்.

திண் கரைப் பலகைகள் 05 இற்காக ரூபா 23,815 மேலதிகமாக செலுத்தப் பட்டிருந்தது.

(உ.) வேலை விடயம் இல 12 இன் கீழான பயணிகள் நாற்காலிகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 69, 080 பெறுமதியான தொகைக்கு முடிாக்கப் மபடாமையினால் எதிர் பார்த்த காரியம் நிறைவேரி இருக்கவில்லை.

3.4.4 <u>அலுதெனிய பிரதேச சபைக்கு சொந்தமான இடதத்தில் சமூர்த்தி பயனாளர்களின் விவசாய தெயாரிப்புகளை கொள்வனவு செய்வதற்கு வியாபார நிலையம் அமைத்தல் ரூபா 498,133</u>

இத் தொழில் சம்பந்தமாக 2016 ஜுனக் 14ம் திகதி மேற்கொள்ளப் பட்ட பௌதீக சோதனை மூலம் பின்வரும் விடயங்கள் கண்டறியப் பட்டன.

அ. கடை அறைகள் 03 இற்காக அடித்தளம் இடப்பட்டு 02 கடை அறைகள் மறைக்கப் படும் வகையில் திண் திரை கூரை பயன் படுத்தி அதில் ஒரு கடை அறையின் வேலைகள் மாத்திரம் பூரணப் படுத்தப் பட்டிருந்தன. பகுதியளவில் பூரணப்படுத்தப்பட்ட கட்டிடத்தின் திண் திரை கூரையிலிருந்து வெளியே இடப்பட்டுள்ள கம்பிகள் துரு பிடித்து சிதைவடைந்த வண்ணம் காணப்பட்டன. திண் திரை கம்பங்களுக்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ள கம்பிகளின் திண் திரை கூரைக்கு மேலுள்ள பகுதி வெளிப்புறமாக காணப்பட்டது.

ஆ. 2015 டிசம்மபர் மாதம் இக் கடை அறையினது வேலைகள் பூரணப் படுத்தப் பட்டு இருப்பினும், அது திட்டமிடப் பட்ட பணிக்கு உபயோகமப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

இ. குறிப்பிட்ட கட்டடம் நிர்மாணிக்கப் பட்ட நிலப் பகுதி நன் கொடையாக பெறப் பட்டிருப்பினும். அதற்கான சட்டபூர்வமான உரிமையை கையளப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்காததுடன் எல்லைகள் தீர்மானிக்கப் பட்டு அவை குறியிடப் படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

3.4.5 <u>கலகெதர சரத் எமுனுகம மைதானம் அமைத்தல் ரூபா.132.500</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. கலரெகதர பொது மைததானத்தின் அனுகல் வழியினை நிர்மானிப்பதற்காக மூபா 150.000 பெறுமதியான மானியங்கள் ஒதுக்கப்பட்டிருப்பினும், அதற்கு அமைவான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆ. தனி நபர் ஒருவருக்கு உரித்தான மண் வெட்டும் இயந்திரம் ஒன்றினை பயன்படுத்தி அணுகல் வழியினது நிர்மானம் மற்றும் மண் அபப்புரப் படுத்தலும் மேற்கொள்ளப் பட்டதாக தொழில்நுட்ப அலுவலர் குறிப்புக்கள் மூலம் கண்டறியப்பட்ட போதிலும், செய்து முடிக்கப்பட்ட அளவுகள் உறுதிப் படுத்தப் பட்டிருக்கவில்லை. அதற்காக ரூபா 132,500 செலுத்தப் பட்டிருந்தது.

இ. குறிப்பிட்ட நபரின் JCS இயந்திரம் மூலம் 09 நாட்களாக 53 மணித்தியாலங்கள் சேவை வழங்"கப் பட்டதாக கோரிக"கை கடிதம் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. தொழில்நுட்ப அலுவலர்கள் குறிப்பிட்ட நடவடிக்கையினை மேற்பார்வை செய்ய கலந்து கொள்ளாமமல் இருந்ததுடன் மைதானப் பொறுப்பாளர் மூலம் மேற்பார்வை செய்யப் பட்டமையினால். கட்டணம் செலுத்தும் படி ததொழில்நுட்ப அலுவலர்கள் மூலம் அறிக்கையிடல் பட்டிருந்தது. 09 தினங்களாக மேற்கொள்ளப் பட்ட திட்டம் தொழில்நுட்ப அலுவலர்களின் மேற்பார்வைக்கு உட்படுத்தப் படாமை பிரச்சினைக்குரிய விடயமாக காணப்பட்டது.

ஈ. குறிப்பிட்ட JCB இயந்திரத்தின் மூலம் மண் அகற்றுதல் மேற் கொள்ளப் பட்டதாக மைதான பொறுப்பாளரினால் 2015 மார்ச் 26ம் திகதி அறிக்கையிடப் பட்டிருந்தது ஆயினும் 2016 ஜுன் 16ம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக சோதனையின் போது மடண் அகற்றப்பட்ட ஒரு இடத்தையேனும் காண்பிக்க மைதான பொறுப்பாளரினால் முடியாமல் போனது. மேலும் தொழில்நுட்ப அலுவலர்களினால் அனுகல் வழி ஒன்று அமைக்கப் பட்டதாக கூறி இருப்பதனால், இவ் அறிக்கைகள் இடையே முரண்பாடுகள் இருப்பதாக அவதானிக்கப்பட்டது.

3.5 <u>மனித வள முகாமைத்துவம்.</u>

அ. சபையில் அனுமதிக்கப்பட்ட பதவி வெற்றிடங்கள் 13 மற்றும் மிகைமை 17 ஆகவும் காணப்பட்டன.

ஆ. நகர மண்டப பரிசோதகர் மற்றும் மைதான பொறுப்பாளர் ஆசிய பதவிகலுக்காக ஊழியர்கள் இருர் வேலைக்கு அமர்த்தப் பட்டிருப்பினும், இப் பதவிகள் அனுமதிக்கப்பட்டு இருக்கவில்லை.

இ. தொழிலாளர் பதவிகளில் ஊழியர்கள் மிகைமையாக இருந்த போதிலும் 2014 ஒக்டோபர் 31ம் திகதி பதில் சுகாதார மற்றும் காவலாளி பதவிகலுக்காக 02 ஊழியர்கள இணைத்துக் கொள்ளப் பட்டிருந்தனர்.

ஈ. பிரதேச சபைக்கு சாலை தொழிலாளர்காக இணைத்துக் கொள்ளப் பட்டிருந்த ஊழியர்கள் 06 பேர் அலுவலக பொறுப்புடைய கடமைகளுக்காக பயன் படுத்தப் பட்டிருந்தனர.

3.6 <u>திண்மக் கழிவு முகாமைத்துவம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.</u>

அ. கழிவுகள் கொட்டப்படும் நிலத்தில் கழிவுகளை வகைப்படுத்தவும் 02 அறைகளைக் கொண்ட கட்டடம் ஒன்று நிர்மானிக்கப்பட்டு மாகாணம் குறிப்பிட்ட மானியங்களின் கீழ் ரூபா. 500.000 செலவழிக்கப் பட்டிருந்தது. ஆயினும் பிரதேச சபையினால் கழிவுகளை வகைப் படுத்தலின்றி அகற்றப் படுகின்றமையிகனால், நிர்மானிக்கப்பட்ட இக் கட்டிடம். உபயோக படுத்தயன்றி செயலற்று காணப்பட்டது.

ஆ. சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஒர நாளைக்கு சேகரிக்கப் படும் கழிவுகள் தொகை காணி சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு சொந்தமான திக்கொயவத்த, கிரீன்வூட் தோட்ட காணி ஒன்றில் கொட்டப் பட்டு இருந்ததுடன், கற்றுச் சூழல் உரிமம் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

இ. கழிவுகள் அகற்றும் இடத்தில் கழிவுகளை வகைப்படுத்தி களஞ்சியப் படுத்த தேவையான வசதிகள் கட்டட வசதிகள் காணப்பட்ட போதிலும், அழியா கழிவுகள் குறைந்த அளவில் வேறு படுத்தி விற்பனை செய்யப்பட்டு மிகுதி கழிவுகள் உரிய முகாமைத்துவம் இன்றி கழிகள் தோண்டப் பட்டு அவற்றினுள் கொட்டப் பட்டிருந்தன. தற்போது குழிகள் நிரம்பி இருக்கின்றமை காரணமாக கழிவுகள் ீள எடுக்கப் படுகின்றதுடன், அனேகமான சுற்றுச் சூழல் சிக்கல்கள் உருவாகியிருந்தன.

ஈ. பூஜாபிடிய பிரதேச சபையில் ஒரு நாளைக்கு சேகரிக்கப்படும் கழிவுகள் டிராக்டர் சுமை 01 -02 இடைப்பட்ட அளவும் வகைப்படுத்தலின்றி பைகளாக இவ் விடத்தின் அணுகல் வழியின் கரு புறத்திலும் முறையின்றி கொட்டப் பட்டிருந்தன.

உ. இவ்விடத்தின் ஒரு புறத்திலும் 02 கால்வாய்கள் காணப்படுவதுடன், குருணாகலை மாவட்டத்தின் மாவதகம பிரதேச சபையின் மூலம் அக் கால்வாய்களின் நீர் நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகின்றமையால் பொது மக்களுக்கு விநியோகம் செய்யும் நீர் அசுத்தம் அடைவதாக மாவதாகம் பொது சுகாதார பரிசோதகர்கள் தொடர்ந்தும் கட்டிக் காட்டியிருந்தனர்.

ஊ. 2016 ஜூன் 14ம் திகதி மேற்கொண்ட பௌதீக சோதனைகளுக்கு அமைய கலகெதர சுஜாதா பெண்டகள் கல்லூரி முன்னால் அமைந்துள்ள வியாபார கட்டிடத் தொகுதியின் கீழ் மாடியில கழிவுகள் குவிந்திருாந்துடன் அங்கு நீண்ட காலமாக கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

எ. ஹதரலியத்த நகரத்தினை சுற்றிலும் கழிவுகள் பெருமளவில் குவிந்து காணப்பட்டதுடன். பேருந்து தரிப்பிடத்தின் அருகாமையில் உள்ள வடிகால் அமைப்பு பிளாஸ்டிக் மற்றும் கழிவுகளினால் நிரம்பி காணப்பட்டது. ஹதரலியத்த நகர மண்டப மலசலகூட அமைப்பின் கழிவு நீர் வெளியேற்றப் படும் குழாய் வழிகளில்நுளம்புகள் வெளிவருவது பௌதீக சோதனையின் போது அவதானிக்கப் பட்டதுடன், இந்த நிலைமையை கட்டுப் படுத்த எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.0 <u>கணக்குகளின் பொறுப்பும் நல்லாலுகையும்</u>

4.1 <u>பாதீட்டு கட்டுப்பாடு</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. 02 வருமான விடயங்கலுக்கான ரூபா.340.000 ஆள மதிப்பிடப்பட்ட வருமான ஈட்டிக் கொள்ளப்பட்டிருக்காததுடன், 05 செலவு விடயங்களுக்காக மதிப்பிடப் பட்ட மூபா 6.480.000 பெறுமதியான செலவுகளில் எவ்விதமான தொகையும் செலவிடப் பட்டிருக்கவில்லை.

ஆ. மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப் பட்டிருந்த பாதீட்டு அறிக்கைக்கு அமைய, மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவுகள். உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகலுடன் ஏற்படும்' போது 04 வருமான விடயங்களில் 28 சதவீதத்தில் இருந்து 96 சதவீதம் வரையும் 05 செலவு விடயங்களில் 09 சதவீதத்தில் இருந்து 62 சத வீதம் வரையிலும் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பளன்படுத்தப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

இ. சபை ரிதியத்தின் மூலம் மேறகொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ரூபா 1.600.000 இற்கான மானியங்கள் 2015ம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் உட்படுத்தப் பட்டிருப்பினும், அதனூடக மூபா 18,937.500 பெறுமதியான ஒப்பந்தங்கள் 46 மேற்கொள்வதற்கு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அதனடிப்படையில், மதிப்பிட்பட்ட மானியங்களை மிகைத்து ரூபா 17,337.500 இற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஈ. மதிப்பீடு செய்யப்பட்டவைகளுக்கு மேலாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போது சபையின் அமைச்சர்களுக்கு வெளிநாட்டு சுற்றுலா செல்வதற்காக ரூபா. 1,100,000 செலவு விடயங்களிலிருந்து பெறுவதற்கு 2015 ஜனவரி 27 ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

4.2 வருடாந்த கொள்முதல் திட்டம்

மீளாய்வாண்டிற்கான கொள்முதல் திட்டமொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

4.3 உள்துறை தணிக்கை

சபையில் முறையான உள்ளகக் கணக்காய்வு நடாத்தியிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் நிர்வாகச் சங்கத்தை செயற்படுத்துதல்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பினும், கூடியிருக்கவில்லை.

4.5 சொத்து முகாமைத்துவம்.

4.5.1 செயலற்று மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. சபைக்கு சொந்தமான ரூபா 1,119,619 பெறுமதியான 03 சொத்து விடயங்கள் 03 வருடங்கலுக்கு முலாக செயலற்று மற்றும் குறை பயன்பாடுடைவையாக காணபடுகின்றன.

ஆ. பிரதே சபைக்கு சொாந்தமான பயன்படுத்தகூடிய இலக்கம் 49-7666 உடை இழுவை இயந்திரம், டேலர் 02 மற்றும் ஒரு நீர் பவுசர் ஆகியன இயற்கை ஆபத்துகலுக்கு உள்ளான நிலையில் மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இ. பா 462, 209 பெறுமதியான 12 சொத்து விடயங்கள் மற்றும் பெறுமதி கணக்கிடப் படாத 02 மோட்டார் சைகிள்கள நீண்ட காலமாக செயலற்று மற்றும் குறை பயன்னாடு உடையவையாக காணப்படுகின்றன.

ஈ. கலகெதர பொது மைதானத்தில் நிர்மானிக்கப்பட்டிருந்த உடற்பயிற்சி நிலையம் 2014ம் ஆண்டு மூடப்பட்டதுடன் நன்கொடையாக பெறப்பட் ரூபா 231,900 பெறுமதியான உடற்பயிற்சி உபகரணங்கள் உபயோகப் படுத்தபடாமல் ஓர் அமையினுள் குவிக்கப்பட்டுள்ளன.

4.5.2 வருடாந்த பண்ட விசாரணை

2015ம் ஆண்டிற்காக மேற்கொதள்ளப் பட்ட பண்ட விசாரணைக்கு அமைய பின் வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. பிரதேச சபை காரியாலயத்தில் காணகப்பட்ட 08 வகையான பொருட்கள் இருப்பு பதிவிற்கு உட் படுத்தப் பட்டிருக்கவில்லை.

ஆ. 03 நூலகங்களினது 432 புத்தகங்கள் பண்ட விசாரனைக்கு சமர்பிக்கப் பட்டிருக்காததுடன் 2016 மே 30ம் திகதி ஆகும் போது அது தொடர்பில் எதுவித நடவடிக்கையும்’ மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

இ. சபபை காரியாலயத்தில் காணப்படும் இருப்பு பதிவு நீண்ட காலமாக மேம்படுத்த பட்டு இருக்காததுடன் இருப்பு பட்டியலில் உள்ள பண்டங்கள் வழங்கல் தொடர்பான குறிப்புக்கள் வைக்கப்பட்டிருக்க்வில்லை பண்ட விசாரனை சபை மூலமும் பண்டங்கள் வழங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தாமல் பதிவு சமப் படுத்தப் பட்டு கைச்சாத்திடப்பட்டிருந்தது.

5. <u>முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்</u>

அ. கணக்கீடு

ஆ. வருமான நிர்வாகம்

இ. பெறவேண்டியவை , செலுத்த வேண்டிவைகளின் நிர்வாகம்

ஈ. சொத்துக்கள் முகாமைத்துவம்

உ. ஒப்பந்த நிர்வாகம்

ஊ. மனித வள முகாமைத்துவம்